1970 மார்ச் 10]

கடைப்பிடிக்கப்படுகிறதா? இல்லையென்றால் ஏன் கடைப்பிடிக்கப்படவில்லை? எனது தொகுதியில் இருக்கும் ராமகிருஷ்ணாராஜ பேட்டையும் அம்மையார்குப்பமும் தொலைவில் இருக்கிறது. ஆகவே, இனிமேலாவது மொபைல் ஹெல்த் வேன் அங்கு அனுப்பி, சிகிச்சை செய்யும் முயற்சியை நமது அரசு செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரக் குறிப்பு தற்போது என்னிடத்தில் இல்லை. உறுப்பினர் அவர்கள் திருத்தணி பகுதியில் மொபைல் வேன் அனுப்புவதற்கான முயற்சிகள் இருக்கின்றதா என்று கேட்டதற்கான விவரக் குறிப்பு தற்போது இல்லை. அங்குள்ள குறைபாடுகளை கவனத்திற்குக் கொண்டுவந்தால், அவைபற்றி சிந்தித்து ஆராய்ந்து பார்க்கலாம். ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியங்களிலும் வேன் இல்லை. மொபைல் வேன் ஒருசில இடங்களில் இருப்பதால், அவர்கள் மூன்று நான்கு இடங்களுக்குப் போக வேண்டியிருப்பதால் போய் விடுகிறார்கள். ஒரு ஒன்றியத்திலிருந்து இன்னொரு ஒன்றியத்திற்கும் போகவேண்டிய நிலைமை இருக்கிறது. ஒவ்வொரு நிலையத்திற்கும் ஒரு மொபைல் வேன் வைக்கப்படுகிற யோசனை பரிசீலிக்கப்படவேண்டி வந்தால், அதுபற்றி பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 293, 294 ஆகியவை பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

மேட்டூர் வேளாண்மைப் பள்ளிக் கட்டடம்.

***295 வினா—திரு. எம். சுரேந்திரன் :** மாண்புமிகு வேளாண்மை, அரிசனநல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூரில் உள்ள வேளாண்மை பள்ளிக் கட்டிடம் சீர் குலைந்து இருப்பது அரசாங்கத்துக்கு தெரியுமா?

(இ) இதைச் சீர்படுத்தி நல்ல கட்டடமாகக் கட்டுவதற்கு அரசாங்கத்திடம் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

(உ) ஆம் எனில், அதற்காக மதிப்பிடப்பட்டுள்ள செலவு எவ்வளவு?

(எ) அது எப்பொழுது கட்டி முடிக்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) மேட்டூர் அணையிலுள்ள வேளாண்மை பள்ளியின் ஓலை வேய்ந்த கூரையில் ஒழுகல் கண்டது. கூரையைப் பழுது பார்க்க ஏற்கனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

(உ) & (எ) வினாக்களுக்கு இடமில்லை.

திரு. எம். சுரேந்திரன் : இன்று விவசாயத்துறையை விரிவு படுத்தி நல்ல முறையில் செய்யவேண்டுமென்று நினைக்கிறபோது அதற்கான பயிற்சி அளிக்கிற இடம் விரிவாகவும், சுத்தமாகவும்

இருக்கவேண்டியது அவசியமாகிறது. ஆகவே கூறைகளை நீக்கி நலல ஓட்டுக் கட்டடமாகச் செய்வதற்கு விரைவில் ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இம்மா நிலத்தில் மொத்தம் 14 வேளாணமைப் பள்ளிகள் இருக்கின்றன. மூனறுக்கு நிரந்தரமான கட்டடம் அமைக்கப்பட்டிருக்கிறது. 1969–70-ககு ஒரு லட்சம் ஒதுக்கி மேலும் இரண்டுக்கான கட்டடம் கட்ட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மேலும் இவ்வாண்டில் 2 பள்ளிக்கான கட்டடம் கட்டப்படும். இப்படி முறையாக அதுபற்றி கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

விவசாயக் கிடங்குகள்.

***296 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு வேளாண்மை அரிசனநல அமைசசா் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடை யளிப்பாரா—

மாவட்ட விவசாய அதிகாரிகளின் கண்காணிப்பில் இயங்கி வரும் விவசாயக் கிடங்குகள் (Agricultural Depots) இலாப கராமாக இயங்கி வருகின்றனவா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : விவசாயத் திற்கு வேண்டிய பொறுக்கு விதை, உரம் மற்றும் ஏனைய உபகர ணங்களை விவசாயிகளுக்கு வழங்கும் பொருட்டேயன்றி இலாப நோக்கோடு அரசாங்கம் விவசாயக்கிடங்குகளை இயக்கிவருவ தில்லை. ஆகவே இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, எத்தனை விவசாயக் கிடங்குகள் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன என்பதை யும், விவசாயக் கிடங்குகள் இல்லாத இடங்களில் கிடங்குகளை ஏற் படுத்த என்ன வாய்ப்பு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட இருக்கிறது என்பதையும் தெரிவிக்க முடியுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : எத்தனை கிடங்குகள் இயங்கி வருகின்றன என்கிற விவரம் இல்லை. புதிய துணைக் கிடங்குகள் துவங்கப்பட வேண்டுமென்றால், மூலக் கிடங்கு களுக்கும் இப்போதுள்ள துணைக் கிடங்குகளுக்கும் உள்ள தொலை தூரம், மூலக் கிடங்கில் நடக்கும் வியாபாரம், துணைக் கிடங்கு ஏற்படுத்தியாக வேண்டிய அவசியம், பஞ்சாயத்து யூனியன் தீர்மா னம் இவற்றின் அடிப்படையில்தான் துவங்க வேண்டும்.

திரு. பி. எஸ். தனுஷ்கோடி : ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் தலைநகரில்தான் அரசினர் கட்டிடங்களில் கிடங்குகள் இருக் கின்றன. மற்றவை பெரும் பகுதி மாதம் 75, 100 ரூபாய் வாடகை என்று வாடகைக் கட்டிடங்களில் இருக்கின்றன. வருஷத்தில் 750 ரூபாய் வாடகை என்றால் நான்கு ஐந்து வருடத்தில் வாடகை மட்டும் எவ்வளவு ஆகிறது என்பதைப் பார்க்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியைப் போடுங்கள்.